# தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம்

எண். 208/2, ஜவஹர்லால் நேரு சாலை, அரும்பாக்கம், சென்னை 600 106
தொலைபேசி எண்: 2363 5011 நிகரி : 2363 8282
மின்னஞ்சல் - tnsec.tn@nic.in இணையதளம் - www.tnsec.tn.nic.in

## செய்தி வெளியீடு

செய்தி வெளியீடு : 51/2022 நாள்: 19.02.2022

### நகர்ப்புற உள்ளாட்சி சாதாரண தேர்தல்கள் - 2022
### குறித்த விவரங்கள்

தமிழ்நாட்டில் நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல்கள் நியாயமாகவும், நேர்மையாகவும், சுதந்திரமாகவும் நடைபெறுவதற்காக தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

இன்று நடைபெற்று வரும் வாக்குப்பதிவின் காலை 9.00 மணி நிலவரப்படி வாக்குப்பதிவு நிலவரம் -

| | | |
|---|---|---|
| மாநகராட்சி வார்டு உறுப்பினர் தேர்தல் | .. | 5.78 % |
| நகராட்சி வார்டு உறுப்பினர் தேர்தல் | .. | 10.32 % |
| பேரூராட்சி வார்டு உறுப்பினர் தேர்தல் | .. | 11.74 % |
| மொத்தம் | .. | 8.21 % |

பெருநகர சென்னை மாநகராட்சி வார்டு உறுப்பினர் தேர்தலில் மட்டும் 3.96 % சதவீதம் வாக்குகள் பதிவாகியுள்ளன.

வாக்குப்பதிவு நடைபெறும் இடங்கள் மற்றும் விவரங்கள், வாக்கு எண்ணுவது குறித்த விவரங்கள் -

| | | |
|---|---|---|
| மொத்த மாநகராட்சிகளின் எண்ணிக்கை | - | 21 |
| மொத்த மாநகராட்சி வார்டுகளின் எண்ணிக்கை | - | 1,373 |
| மொத்த நகராட்சிகளின் எண்ணிக்கை | - | 138 |
| மொத்த நகராட்சி வார்டுகளின் எண்ணிக்கை | - | 3,842 |
| மொத்த பேரூராட்சிகளின் எண்ணிக்கை | - | 489 |
| மொத்த பேரூராட்சி வார்டுகளின் எண்ணிக்கை | - | 7,605 |
| மொத்த வாக்குச்சாவடிகளின் எண்ணிக்கை | - | 30,735 |
| மொத்த வாக்கு எண்ணிக்கை மையங்கள் | - | 268 |

| | | |
|---|---|---|
| போட்டியிடும் வேட்பாளர்களின் எண்ணிக்கை | - | 57,746 |
| போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் | - | 218 |
| வேட்புமனு தாக்கல் இன்மை | - | 1 |
| அதிகபட்சமாக 24 வேட்பாளர்கள் போட்டியிடும் வார்டுகளின் எண்ணிக்கை (சென்னை மாநகராட்சி 190, 192வது வார்டு) | - | 2 |
| குறைந்தபட்சமாக 2 வேட்பாளர்கள் மட்டுமே போட்டியிடும் வார்டுகளின் எண்ணிக்கை | - | 1,714 |
| 16 வேட்பாளர்களுக்கு மேல் போட்டியிடும் வார்டுகளின் எண்ணிக்கை | _ | 34 |
| வாக்குச்சாவடிப் பணியில் ஈடுபடும் மொத்தப் பணியாளர்களின் எண்ணிக்கை | - | 1.32 இலட்சம் |
| தேர்தல் நடத்தும் அலுவலர்கள் எண்ணிக்கை | - | 648 |
| உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்கள் எண்ணிக்கை | - | 1,642 |
| மொத்த வாக்காளர்களின் எண்ணிக்கை - (ஆண் - 13872328, பெண் - 14459303, மூன்றாம் பாலினம் - 4702) | - | 2.83 கோடி |

| | | |
|---|---|---|
| மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஆகியோரால் பதற்றம் நிறைந்த வாக்குச்சாவடி என கண்டறியப்பட்ட வாக்குச்சாவடிகள். | - | 5,920 |
| சிசிடிவி கேமரா பொருத்தப்பட்ட வாக்குச்சாவடிகளின் எண்ணிக்கை | - | 25,735 |
| Web Streaming பொருத்தப்பட்ட வாக்குச்சாவடிகளின் எண்ணிக்கை | - | 5,000 |
| நியமனம் செய்யப்பட்ட தேர்தல் பார்வையாளர்கள் (Election Observer) | - | 41 |
| நியமனம் செய்யப்பட்ட வட்டார பார்வையாளர்கள் (Block Observer) | - | 697 |
| நியமனம் செய்யப்பட்ட நுண்பார்வையாளர்கள் (Micro Observer) | - | 1,892 |
| மொத்தம் பறக்கும் படைகளின் எண்ணிக்கை | - | 1,695 |

பாதுகாப்புப் பணியில் ஈடுபடும் காவலர்கள், முன்னாள் ராணுவத்தினர் மற்றும் ஊர்க்காவல் படையினர்

| | |
|---|---|
| காவலர்கள் | 97,882 |
| முன்னாள் இராணுவத்தினர் | 2,870 |
| ஊர்க்காவல் படையினர் | 12,321 |
| மொத்தம் | 1,13,073 |

வாக்குச்சாவடி சீட்டு (Booth Slip) உள்ளவர்களும் அல்லது வாக்குச்சாவடி சீட்டு இல்லாதவர்களும் வாக்காளர் அடையாள அட்டை (EPIC), அல்லது தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம் அனுமதித்துள்ள கீழ்க்காணும் 11 அடையாள ஆவணங்களில் ஏதாவது ஒன்றைக் காண்பித்து வாக்களிக்கலாம்.

1) ஆதார் அட்டை
2) மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டத்தின் பணி அட்டை
3) புகைப்படத்துடன் கூடிய வங்கி / அஞ்சலக கணக்குப் புத்தகங்கள்
4) தொழிலாளர் நல அமைச்சக திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட மருத்துவ காப்பீடு ஸ்மார்ட் கார்டு
5) ஓட்டுநர் உரிமம்

6) நிரந்தர கணக்கு எண் அட்டை (PAN CARD)

7) தேசிய மக்கள் பதிவேட்டின்கீழ் இந்திய தலைமைப் பதிவாளரால் வழங்கப்பட்ட ஸ்மார்ட் கார்டு (Smart Card)

8) இந்திய கடவுச்சீட்டு (Indian Passport)

9) புகைப்படத்துடன் கூடிய ஓய்வூதிய ஆவணம்

10) மத்திய / மாநில அரசு, அல்லது பொதுத் துறை நிறுவனங்கள் அல்லது வரையறுக்கப்பட்ட பொது நிறுவனங்களில் பணிபுரியும் அலுவலர்கள் / பணியாளர்கள்/தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்ட புகைப்படத்துடன் கூடிய பணி அடையாள அட்டை

11) பாராளுமன்ற / சட்டமன்ற / மேலவை உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அலுவலக அடையாள அட்டை

மாற்றுத் திறனாளிகள், நலிவுற்றவர்கள் மற்றும் மூத்த குடிமக்கள் வாக்குச்சாவடிக்கு வந்து வாக்களிப்பதற்கு ஏதுவாக வாக்குச்சாவடி அமைந்துள்ள கட்டடத்தில் சரிவுப்பாதை (ramp), மூன்று சக்கர நாற்காலி வசதி (wheel chair) மற்றும் துணையாள் (helper) ஏற்படுத்தப்பட்டுள்ளது. கண்பார்வையற்றோர் உதவியாளருடன் சென்று வாக்களிக்கலாம்.

கோவிட்-19 தடுப்பு நடவடிக்கைக்காக ஒவ்வொரு வாக்குச்சாவடிக்கும் வெப்பமானி, கை சுத்திகரிப்பான், முகக்கவசம், முகமூடி, கையுறை உள்ளிட்ட 13 பாதுகாப்பு உபகரணங்கள் / பொருட்கள் வழங்கப்பட்டுள்ளன. இதற்காக இவ்வாணையத்தால் 12 கோடி ரூபாய் செலவு செய்யப்பட்டுள்ளது.

## <u>நடத்தை விதிகள் மீறல்</u>

29.1.2022 முதல் 16.2.2022 வரை பறிமுதல் செய்யப்பட்ட விவரம்

| | |
|---|---|
| ரொக்கம் பறிமுதல் | - ரூ. 8,21,42,279/- |
| மதுபான பாட்டில்கள் பறிமுதல் செய்யப்பட்டது | - ரூ. 1,13,23,955/- |
| பரிசு பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டது | - ரூ. 2,54,69,685/- |
| மொத்தம் | - ரூ. 11,89,35,919 |

ஒரே கட்டமாக வாக்குப்பதிவு 19.02.2022 அன்று நடைபெற இருந்த நிலையில்,தேர்தல் விதிகளை பின்பற்றாமல் தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்கள் செயல்பட்டதால் தூத்துக்குடி மாவட்டம், கடம்பூர் முதல்நிலை பேரூராட்சிக்கு உட்பட்ட அனைத்து வார்டுகளுக்குமான தேர்தல்கள் தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையத்தால் இரத்து செய்யப்பட்டது.

அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் வேட்பாளர்கள் இறப்பின் காரணமாக தொடர்புடைய தேர்தல் நடத்தும் அலுவலர்களால் தேர்தல் ஒத்திவைக்கப்பட்ட இடங்கள்

| வ. எண் | மாவட்டம் | உள்ளாட்சி அமைப்பு | வார்டு எண் | வேட்பாளர் சார்ந்த கட்சி |
|---|---|---|---|---|
| 1 | காஞ்சிபுரம் | காஞ்சிபுரம் மாநகராட்சி, | 36 | அஇஅதிமுக |
| 2 | மயிலாடுதுறை | மயிலாடுதுறை நகராட்சி | 19 | அஇஅதிமுக |
| 3 | விருதுநகர் | வத்திராயிருப்பு தேர்வுநிலை பேரூராட்சி | 2 | திமுக |
| 4 | ஈரோடு | அத்தாணி பேரூராட்சி | 3 | திமுக |
| 5 | ஈரோடு | அம்மாபேட்டை பேரூராட்சி | 2 | திமுக |
| 6 | தஞ்சாவூர் | அய்யம்பேட்டை பேரூராட்சி | 9 | திமுக |

**(தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணைய ஆணைப்படி)**

19/2/2022

மக்கள் தொடர்பு அலுவலர்